**செய்தி வெளியீடு எண்:587** **நாள்:18.7.2008**

## <u>பத்திரிகை செய்தி</u>

சென்னை மற்றும் புறநகர்பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு, பொது விநியோக திட்டம் மூலம் வழங்க மாதம் 500 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு ஜுலை 2008 மாதத்திற்கு வழக்கமான ஒதுக்கீடு தவிர கூடுதலாக 700 மெ.டன் கோதுமை பொது விநியோக திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கோதுமை பெறுவதில் குறைகள் இருப்பின் சென்னை துணை ஆணையர் (வடக்கு) 28551028 அல்லது துணை ஆணையர் (தெற்கு) 28551026 அல்லது சம்பந்தப்பட்ட உதவி ஆணையரை தொடர்பு கொள்ளலாம்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9